1992 செப்டம்பர் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை இதோடு போதும். (குறுக்கீடுகள்) 12 பேர், நீங்கள் எல்லோரும் நிற்கிறீர்கள். எல்லோரும் கேள்வி கேட்கிறீர்கள். இதிலே வேண்டாம். நீங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதுவே போதும். உட்காருங்கள்.

4. ஓர் உறுப்பினரைக் குறிப்பிட்டு ''எம்.ஜி.ஆர். — அ.தி.மு.க.'' என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் மூலம் பத்திரிகையாளர்களுக்கு என்னுடைய ஒரு அறிவுரையைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம் ஒரு உறுப்பினரைக் குறிப்பிட்டு அவர் ''எம்.ஜி.ஆர்.-அ.தி.மு.க. என்கிற கட்சி'' என்று பல பத்திரிகைகள் குறிப்பிட்டு இருக்கின்றன. சட்டமன்றத்தைப் பொறுத்தமட்டில் ''எம்.ஜி.ஆர்.-அ.தி.மு.க.'' என்கிற கட்சி இல்லை என்பதையும், அப்படிப்பட்ட கட்சி இருந்து அதிலே ஒரு உறுப்பினர் இங்கே அங்கம் வகிக்கிறார் என்ற நிலையையும் இல்லை. அது போன்ற ஒரு கட்சி அங்கீகரிக்கப்பட்டதாகவோ அல்லது பதிவு செய்யப்பட்டதாகவோ தேர்தல் கமிஷனிடத்திலிருந்து சட்டமன்றப் பேரவைக்கு எத்தகைய தகவலும் இல்லை.

எனவே, இன்றைக்கு ஏதோ வெளியிட்டு இருக்கலாம். தொடர்ந்து அது போன்று வெளியிடுவதைத் தவிர்க்குமாறு பத்திரிகையாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக அரசு தலைமைக் கொறடா என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, இந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று கேட்டார். நானே இந்தப் பிரச்சினை குறித்து அவையின் மூலமாகப் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட எம்.ஜி.ஆர்.-அ.தி.மு.க. என்கிற கட்சி தேர்தல் கமிஷனால் பதிவு செய்யப்படவோ, அங்கீகரிக்கப்படவோ இல்லை. அது போன்ற தகவல் எதுவும் சட்டமன்றப் பேரவைக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களைப் பொறுத்தமட்டில் அந்தக் கட்சியின் உறுப்பினர் என்று அவர் கோருவாரேயானால் அது போன்ற தகவல்களை சட்டமன்றப் பேரவைக்கு—அவர் பதிவு செய்த விவரம் அல்லது எலக்ஷன் கமிஷனிடத்திலிருந்து அவர் பெற்ற ஆதாரம் போன்றவற்றை கொடுத்திருப்பாரானால் அது பற்றி நான் கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். இன்றைக்கு இருக்கிற நிலவரத்தின்படி அவர் சுயேட்சையா, இண்டிபெண்டண்டா அல்லது அன்-அட்டாச்ட் மெம்பரா என்பது பற்றித் துறை ஆய்வு செய்துகொண்டிருக்

ஓர் உறுப்பினரைக் குறிப்பிட்டு ''எம்.ஜி.-ஆர்.அ.தி.மு.க.'' என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

கிறது. அது முடிவான பின்னர் அதுபற்றி அறிவிப்பேன். அது வரையிலும் அவர் அத்தகைய கட்சியில் இருக்கிறார் என்று வெளியிடாமல் இருக்குமாறு பத்திரிகையாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-45.

5. கவன ஈர்ப்பு.

பேராவூரணி—வெட்டன்விடுதி சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. சுவாமிநாதன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பேராவூரணியிலிருந்து வெட்டன்விடுதி வரை சென்று கொண்டிருந்த சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கு இப்போது பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. காரணம், அதற்குப் பாலம வசதிகள் நன்றாக இல்லை என்பது உறுப்பினருக்கே நன்றாகத் தெரியும். நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, எங்கும் புரட்சி, எதிலும் புரட்சி என்ற திட்டத்தின் அடிப்படையில், போக்குவரத்துத் துறையில் மட்டுமல்ல, இங்கே நெடுஞ்சாலைத் துறையில் மட்டும் 4 மடங்கு நிதியைக் கூடுதலாக ஒதுக்கி, பல்வேறு பாதைகளை—இந்திய நாட்டினுடைய வரலாற்றில் தமிழகத்திலே சிறப்புற நடைபெறுவதற்கு—உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பான முறையிலே அந்தப் பகுதியிலே இயங்கிக் கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.